இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 31-07-2024

# மோசடியை ஒப்புக்கொண்டார்கள்

'நீட்' தேர்வே மோசடியானதுதான் என்பதை இதுவரை நாம் சொல்லி வந்தோம். இப்போது, அந்தத் தேர்வு நடத்துபவர்களே அதை ஒப்புக் கொண்டு விட்டார்கள்!

**720 மதிப்பெண்ணுக்கு 720 மதிப்பெண்ணை 61 பேர் பெற்றதாக அறிவிக்கப்பட்டது முதலில். திருத்தப்பட்ட இறுதி முடிவுகளின்படி இப்போது இந்த எண்ணிக்கை 17 ஆக குறைந்துவிட்டது. உச்சநீதி மன்றத்தில் வழக்கு போடாமல் போயிருந்தால் என்ன நடந்திருக்கும்? மோசடியாக மதிப்பெண் பெற்றவர்கள் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்திருப்பார்கள்.**

**இன்னொன்றையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த ஆண்டு நீதிமன்றம் விசாரணை நடத்தியதால் இந்த மோசடி ஓரளவு தடுக்கப்பட்டுள்ளது. இத்தனை ஆண்டுகளாக நடந்த தேர்வில் எத்தனை மோசடிகள் நடந்துள்ளதோ? தேர்வு நடத்தியவர்களின் மனசாட்சிக்குத்தான் தெரியும். உச்சநீதிமன்றத்தின் கிடுக்குப் பிடியில் தப்ப முடியாமல், தாங்கள் செய்த மோசடியை பகிரங்கமாக ஒப்புக் கொள்ளும் நிலைமைக்குத் தள்ளப்பட்டது தேசியத் தேர்வுகள் முகமை.**

தேர்வுகளை முறைப்படுத்துவதுதான் இதுபோன்ற முகமைகளின் பணியாக இருக்க, மோசடிகளைச் செய்வதும், அதை மறைப்பதும் தான் தேசியத் தேர்வுகள் முகமையின் பணியாக இருந்துள்ளதை இந்த ஆண்டு முழுமையாக இந்திய நாடு அறிந்தது.

மே மாதம் 5 ஆம் தேதி நடைபெற்ற 'நீட்' தேர்வில் 23.33 லட்சம் மாணவ, மாணவியர் இந்தியா முழுவதும் எழுதினார்கள். தேர்வு நடந்த நாளின் போதே வினாத்தாள் கசிந்தது. உத்தரப்பிரதேச தேர்வு மையத்தில் தேர்வு தொடங்கும் முன் வினாத்தாள் சமூக வலைதளத்தில் கசிந்தது. அரியானாவிலும் இதே போன்று நடந்தது. பீகாரிலும், ஜார்கண்ட் மாநிலத்திலும் இதே போல் வினாத்தாள் கசிந்தது. ஆனால் அதைப் பற்றி தேர்வு முகமை கவலைப்படவில்லை. உடனடியாக இந்தத் தேர்வு ரத்து செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அடுத்த மோசடியை கருணை மதிப்பெண் என்ற பெயரால் அரங்கேற்றியது தேசியத் தேர்வு முகமை. 1500 பேருக்கு கருணை மதிப்பெண் வழங்கி இருக்கிறார்கள். இவர்களுக்கு மறுதேர்வு நடத்த உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. மறுதேர்வுக்கு பலபேர் வரவில்லை. எழுதியவர்கள் முடிவிலும் முன்பு போல் இல்லை. அரியானா மாநில மையத்தில் 6 பேர் முதலில் நடந்த தேர்வில் முதலிடம் பெற்றிருந்தார்கள். மறுதேர்வில் இவர்கள் 6 பேரும் முதலிடம் பெறவில்லை.

**தேர்வு முடிவுகள் வந்தது. அரியானாவில் ஒரே தேர்வு மையத்தில் தேர்வு எழுதிய 6 பேர் 720க்கு 720 மதிப்பெண்ணை எடுத்தார்கள். இது அடுத்த அதிர்ச்சியாகும்.**

**இதுவரை இல்லாத வகையில் 67 பேர் 720க்கு 720 எடுத்தார்கள். இது அடுத்த பேரதிர்ச்சியாகும்.**

**இயற்பியல் வினாத்தாளில் குழப்பம் என்று சொல்லி 44 பேருக்கு கூடுதல் மதிப்பெண் போட்டிருந்தார்கள். அதுவும் உச்சநீதிமன்ற விசாரணையில் ரத்தாகி விட்டது.**

இவ்வளவும் உச்சநீதிமன்ற விசாரணை மூலமாக வெளியில் வந்தவை. விசாரணையின் போது தேசியத் தேர்வு முகமை ஒப்புக் கொண்ட பின்னால் வெளிச்சத்துக்கு வந்த முறைகேடுகள். எந்தத் தவறுமே நடக்கவில்லை என்று இதுவரை சாதித்தது தேசியத் தேர்வு முகமை.

தேசியத் தேர்வு முகமை ஒரு மனுவை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. "மே 5 ஆம் தேதி நடத்தப்பட்ட 'நீட்' தேர்வு எந்தவித சட்ட விரோத நடவடிக்கைக்கும் இடமளிக்காமல் நேர்மையாக நடத்தப்பட்டது. இத்தேர்வில் பெரிய அளவில் முறைகேடு நடந்துள்ளதாக தெரிவிக்கப்படும் புகாருக்கு ஆதாரமில்லை" என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்று உச்சநீதிமன்றம் சொன்னதும் ஒவ்வொரு குற்றமாகத் திருத்தப்படுகிறதே? இப்போது மட்டும் எப்படி ஒப்புக் கொள்கிறார்கள்.

'நீட்' தேர்வு ரத்து செய்யப்பட்டிருக்க வேண்டும். 'நீட்' தேர்வை உச்சநீதிமன்றம் ரத்து செய்யவில்லையே தவிர, குற்றம் நடந்துள்ளதை ஒப்புக் கொண்டுள்ளது. **"நீட் தேர்வு வினாத்தாள்கள் ஹசாரிபாக், பாட்னாவில் கசிந்திருக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. 'நீட்' வினாத்தாள் கசிவால் 155 மாணவர்கள் பலனடைந்திருக்கிறார்கள் என்பது சி.பி.ஐ. விசாரணை மூலம் தெரிய வருகிறது"** என்பதை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே, தேர்வில் மோசடி நடந்துள்ளது என்பது உச்சநீதிமன்றத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும். அவர்கள் சொன்னபடி தேர்வு முகமையும் நடந்து பலரை தகுதி நீக்கம் செய்திருப்பதும், மோசடியை ஒப்புக்கொண்ட தன்மையே ஆகும்.

இந்த மோசடித்தனங்கள் அனைத்தும் வட மாநிலங்களில் மட்டும் திட்டமிட்டு அரங்கேற்ற அனுமதிக்கப்படுகின்றன. இதற்குப் பின்னால் இருக்கும் சூட்சுமம் என்ன? காது கம்மலைக் கழற்று, தாலி அணிந்திருந்தால் அதையும் கழற்று என்கிற அளவுக்கு தமிழ்நாட்டு தேர்வர்களை கொடுமைப்படுத்துகிறார்கள். ஆனால் வட மாநிலங்களில் ஆள் மாறாட்டம் செய்யவே அனுமதிகள் எளிதில் தரப்படுகின்றன. வினாத்தாள்கள் வட மாநிலங்களில் முன்கூட்டியே பரப்பப்படுகிறது. தமிழ்நாட்டில் ஏன் லீக் செய்யப்படுவது இல்லை?

**குஜராத், ராஜஸ்தான், அரியானா மாநிலங்களில் இருப்பவர்கள் வசதிக்காகத்தான் இந்தத் தேர்வுகள் திட்டமிடப்படுகிறதா என்ற சந்தேகம் இயல்பாக வருகிறது. மோசடித்தனங்கள் முழுக்க அம்பலம் ஆனபிறகும் 'நீட்' தேர்வை ஒன்றிய பா.ஜ.க. அரசு ரத்து செய்யாமல் இருக்கும் பின்னணியில் மாபெரும் சதி இருக்கிறது என்பதே உண்மை. முழு உண்மை.**

ஒன்றிய அரசு சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்துவதை உறுதி செய்வோம்!

# சமூக நீதியை நிலைநாட்ட ஒன்றிணைந்து பணியாற்றுவோம்!

## இந்திய சமூக நீதிக் கூட்டமைப்பின் பெரும் பங்கினைப் பாராட்டி

## வெளியிட்ட வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

சென்னை, ஜூலை 31- அகில இந்திய சமூக நீதிக் கூட்டமைப்பு ஆற்றிய பெரும் பங்கினால், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மருத்துவப் படிப்புகளில் கிடைக்கப் பெற்ற இடங்களின் எண்ணிக்கை, புள்ளிவிவரம் கண்டு மகிழ்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், "ஒன்றிய அரசு சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்துவதை உறுதி செய்வோம்!" என்றும், "சமூக நீதியை நிலைநாட்ட ஒன்றிணைந்து பணியாற்றுவோம்" என்றும் சூளுரைத்துள்ளார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு: -

**தி.மு.க. மேற்கொண்ட சமரசமற்ற சட்டப் போராட்டத்தினால், கடந்த 3 கல்வி ஆண்டுகளில் 15,066 மருத்துவம் மற்றும் பல் மருத்துவப் படிப்புகளுக்கான இடங்கள் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குக் கிடைத்துள்ள செய்தியைப் பகிர்கையில் எனது நெஞ்சில் பெருமை பொங்குகிறது.**

**மேலும், இந்தச் சாதனையின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டி, இந்தியாவெங்கும் OBC இடஒதுக்கீடு குறித்த பல பயனுள்ள விவாதங்களுக்கு வழிவகுத்ததில், அகில இந்திய சமூகநீதிக் கூட்டமைப்பு பெரும் பங்காற்றியுள்ளது.**

**நாம் செய்ய வேண்டிய பணிகள் பல உள்ள என்றாலும், உடனடியாகச் செய்தாக வேண்டியது ஒன்றிய அரசு சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்துவதை உறுதிசெய்வதுதான். அப்போதுதான் பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் விகிதத்தை அறிந்து, சமூக நீதியை நிலைநாட்டும் வகையில் நமது பங்கைப் பெற முடியும்.**

**இதனைச் சாதிக்க ஒன்றிணைந்து பணியாற்றிடுவோம்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி...

முதல் பக்கத் தொடர்ச்சி

எல்லாமே சொந்த காரணங்களுக்காக அல்லது அவர்களுக்குள்ளே இருக்கக் கூடிய முன் விரோதத்தின் அடிப்படையில், பகைமை அடிப்படையில், ஒருவருக்கொருவர் முன்விரோதம் காரணமாக தான் இந்த சம்பவங்கள் நடந்து இருக்கின்றனவே தவிர, இதில் எதுவுமே இன்றைக்கு சட்டம் ஒழுங்கு சீர் கெடுக்கும் அளவுக்கு எந்த சம்பவங்களும் கிடையாது. இன்று மக்கள் தொகை பல மடங்கு உயர்ந்திருக்கிறது. அதே நேரத்தில் இது போன்ற தற்செயலான சம்பவங்கள் எண்ணிக்கை ஒருசில அதிகமாக இருக்கும், குறைவாக இருக்கும். ஆனால், அதற்கு அரசாங்கம் எந்த வகையிலும் பொறுப்பாக முடியாது.

நாங்கள் எந்த வகையிலும் அதற்கு பொறுப்பாக இருந்தால், எங்கள் மீது குற்றம் சுமத்தலாம். ஆனால் அதே நேரத்தில் யார், யாருக்கு முன் விரோதம் இருக்கின்றது என்றெல்லாம் இப்போது கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். காவல்துறையினர் ரவுடிகளின் பட்டியலை வைத்து அவர்களுக்குள் motive இருக்கிறதா? முன் பகைமை இருக்கிறதா? விரோதம் இருக்கிறதா? என்று அவற்றையெல்லாம் கண்டறிந்து தீர்த்து வைக்கவேண்டும் என்றும், இது போன்ற சம்பவங்கள் நடைபெறக்கூடாது என்றும் முன்நடவடிக்கை எடுக்கின்ற முதலமைச்சராக நமது முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே, சட்டம் ஒழுங்கை இன்றைக்கு இந்த அரசு சிறப்பாக பேணிப்பாதுகாப்பதால்தான் இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு இன்றைக்கும் இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது, மறுக்கவும் முடியாது.

அனைத்து தொழிலதிபர்களும் தமிழ்நாட்டை நாடி வருகிறார்கள். ஆனால், எடப்பாடி பழனிச்சாமி போன்றவர்கள் இதை வேறு கோணத்தில் மாற்றிவிட்டு தமிழ்நாடு பின்னோக்கிச் சென்றுவிடுமா? என்று கனவு காண்கிறார். அவருடைய கனவு ஒரு காலத்திலும் பலிக்காது. நிச்சயமாக முதலமைச்சர் அவர்கள் எல்லாவற்றையும் வென்று காண்பிப்பார். தமிழ்நாடு தான் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக, சிறந்த அமைதிப் பூங்கா என்பதை நிலைநிறுத்துவார்.

**கேள்வி :** சீர்திருத்தப் பள்ளியிலிருந்து வெளியில் வருபவர்களை முறையாக கண்காணிக்கவில்லையா? நடந்த சம்பவங்களில் எல்லாம் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள். அது பற்றி?

**பதில் :** சிறார் சீர்திருத்தப் பள்ளியிலிருந்து வருபவர்களை நன்னடத்தை அலுவலர்களால் கண்காணிக்கப்படுகிறார்கள். சிறார் சீர்திருத்தப் பள்ளியிலிருந்து வருபவர்களை திருத்தி அனுப்பும் பொறுப்பைத்தான் சிறைகள் மற்றும் சீர்திருத்த துறை செய்து வருகிறது. அவர்களை குற்றவாளிகளாக வெளியே வர அனுமதிப்பது கிடையாது. அவர்களை திருத்தி தான் வெளியே அனுப்புகிறோம். அங்கு இருக்கக் கூடிய ஒரு சிலர் சந்தர்ப்ப சூழ்நிலையினால் தவறுக்கு சென்று இருப்பார்களே தவிர, பெரும்பான்மையானவர்கள் அனைவரும் மீண்டும் சிறைக்கு செல்லக்கூடிய எண்ணத்தில் இல்லாதவர்களாக, அவர்களை நல்லவர்களாக, சமுதாயத்துடன் இணைந்து வாழக்கூடியவர்களாக அவர்களை திருத்தி அனுப்பும் பணியை தான் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பள்ளிகள் செய்துவருகிறது.

**கேள்வி :** காவல் துறை ரவுடிகளை தொடர்ந்து கண்காணித்து வருகிறது. அதேபோல், முன்னாள் குற்றவாளி களை தொடர்ச்சியாக கண்காணித்து வருகிறார்கள் என்று கூறுகிறீர்கள். அது பற்றி?

**பதில் :** நாங்கள் முன்னாள் குற்றவாளிகளை கண்காணித்துக்கொண்டு தான் இருக்கிறோம். புதிய புதியதாக குற்றவாளிகள் வருகின்றார்கள். முன்னாள் குற்றவாளிகளை அடையாளம் கண்டுபிடித்து தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். காவலர்கள் அவர்களை கண்காணித்து வரும் போது, அவர்களுக்கே தெரியாமல் புதிய குற்றவாளிகள் வருகின்றபோது, அவர்களை நாங்கள் என்ன செய்ய முடியும். மீண்டும் அவர்களை வளையத்தில் கொண்டுவந்து கண்காணிக்கின்றோம். எனவே, நிறைய செயல்களை கண்காணித்து தடுத்திருப்பது காவல்துறை தான். சிறப்பாக காவல் துறை பணியாற்றி குற்றங்களை ஒழிக்க வேண்டும் என்பதற்காக மிகுந்த முயற்சி எடுத்து தடுத்திருக்கிறது. எனவே தான் நாம் இன்று சுதந்திரமாக இருக்க முடிகிறது. எனவே, முதலமைச்சர் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் தான் இதற்கு அடிப்படை காரணம்.

**தலைவர்களுக்கு பாதுகாப்பு!**

**கேள்வி :** தண்டனைகள் குறைவாக இருக்கிறதே? அது பற்றி.........

**பதில் :** அவர்களுக்கான தண்டனைகள் அதிகமாக இருக்கின்றன. நிச்சயமாக அவர்களுக்கு அதிக பட்ச தண்டனைகளை பெற்று கொடுத்தால் போதும். அதனால், அதிக பட்ச தண்டனைகள் குற்றவாளி களுக்கு கிடைப்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது.

**கேள்வி :** அச்சுறுத்தல் உள்ள அரசியல் தலைவர்களுக்கு தனிப்பட்ட பாதுகாப்பு தொடர்பாக?

**பதில் :** எந்த அரசியல் தலைவர்களுக்கு அச்சுறுத்தல் இருக்கிறது என்று சொன்னால், முழுமையாக முதலமைச்சர் அவர்கள், இந்த அரசு அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதில் தயங்குவது கிடையாது. யாரும் அச்சுறுத்தல் இருக்கிறது என்று தகவல் தெரிவிக்கவில்லை.

**கேள்வி :** அரசுக்கு இது போன்ற கோரிக்கைகள் வந்திருக்கிறதா? ஏன் என்றால், ஜான்பாண்டியன் என்பவர் ஏற்கனவே அவருக்கு அச்சுறுத்தல் இருக்கிறது என்று பேட்டியெல்லாம் கொடுத்து இருந்தார்கள். அது பற்றி...

**பதில் :** அப்படி கோரிக்கைகள் வந்திருந்தால், உள்துறையிடம் விசாரித்து அதற்குரிய பதிலைத் தருவோம்.

**கேள்வி :** சமீபகாலமாக கிளைச் சிறைகள் மூடுவதாக தகவல் வெளியாகியுள்ளது. அது பற்றி?

**பதில் :** வதந்திகளுக்கெல்லாம் நாங்கள் பதில் கூற முடியாது. அந்த சிறைகள் சிறிது மோசமான நிலையில் உள்ளதால், அந்த சிறைகள் சரிசெய்து அந்த சிறைகளும் இயங்க வேண்டும் என்று தான் சொல்லியிருக்கின்றோமே தவிர, எந்த சிறைகளையும் நாங்கள் மூட வேண்டும் என்று சொல்லவில்லை. நிச்சயமாக அந்த சிறைகளை மூட வேண்டிய அவசியம் கிடையாது. எனவே, அந்த சிறைகளை பழுது பார்ப்பதற்கான நிதியை கேட்டிருக்கிறோம். நிதியைப் பெற்று அந்த சிறைகளும் இயங்கும்.

**கேள்வி :** குற்ற வழக்குகள் தொடர்புத் துறை இயக்குநர் நியமனம் தொடர்பாக?

**பதில் :** அவரை நியமிக்கவேண்டும் என்பது அரசு எடுத்திருக்கும் முடிவு.

**கேள்வி :** TNPSCஇல் இருந்துதான் நியமனம் செய்து தரவேண்டும் என்ற procedure ஏதாவது இருக்கிறதா?

**பதில் :** இல்லை. 15 ஆண்டுகள் வழக்கறிஞராக இருந்தவரையும் நியமிக்கலாம். அதாவது இப்போது தற்காலிகமாக தான் (acting) நியமித்திருக்கிறோம்.

**கேள்வி :** இந்த பதவியில் இதற்கு முன்பு நியமித்திருக்கிறீர்களா?

பதில் : இவரை Actingஆக தான் நியமித்திருக்கிறோம். நிரந்தரமல்ல.

**கேள்வி:** புதிய குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில்தான் நியமிக்கப்பட்டிருக்கிறரா? ஆனால் தமிழ்நாடு அரசாங்கம் அந்த புதிய குற்றவியல் சட்டத்தை பின்பற்றுகிறதா?

பதில் : பழைய குற்றவியல் சட்டத்தில் இருக்கின்ற சரத்துக்களை தான் புதிய குற்றவியல் சட்டத்தில் இருக்கிறது. அதனால், அதுபற்றி ஒன்றும் கிடையாது.

**கேள்வி :** அதேபோல, லோக்ஆயுக்தாவுக்கு இதுபோல actingஆக நியமித்திருக்கிறீர்களா? Select committee நடைபெற்று கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் ஆகிவிட்டது. தற்போது லோக் ஆயுக்தாவுக்கும் இதுபோல actingஆக நியமித்திருக்கிறீர்களா? அது காலந்தள்ளி போகின்றதா?

**பதில் :** அதற்கும் உரிய காலத்தில் உரிய முடிவை முதலமைச்சர் அவர்கள் எடுப்பார்.

**கேள்வி :** தர்மபுரி மாவட்டத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பு ஆணவப் படுகொலை நடந்திருக்கிறது. தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது கூட்டணிக் கட்சியில் இருக்கின்ற மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கூட பேரவையில் கேள்வி எழுப்பினார்?

**பதில் :** ஆணவப் படுகொலை நாங்கள் என்றைக்கும் ஆதரிப்பது கிடையாது. உங்களுக்கு நன்றாக தெரியும். அது யாராக இருந்தாலும் அவர்கள் மீது உரிய நடவடிக்கையை இந்த அரசு தைரியமாக முதலமைச்சர் அவர்கள் எடுப்பார்கள். நாங்கள் ஆணவப் படுகொலையை ஆதரிக்க வேண்டும் என்பது எங்களுக்கு தேவையே கிடையாது. எனவே முதலமைச்சர் அவர்கள் அதற்கெல்லாம் ஆதரவு கொடுப்பது கிடையவே கிடையாது. அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை வாங்கிக் கொடுப்பதுதான் அவருடைய பணி.

**கேள்வி:** தண்டனை கடுமையாக்கினால் குற்றங்கள் குறையும் அது பற்றி?

**பதில் :** கொலை குற்றத்திற்கு அதிக பட்சம் ஆயுள் தண்டனை தானே.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியளித்தார்.



உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திருவெண்ணைநல்லூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 11 ஆம் வகுப்பு படிக்கும் மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் சி.பழனி, விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர். சு.விசுவநாதன், பேரூர்ச் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றியக் குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், பேரூராட்சி மன்றத் தலைவர் அஞ்சுகம் கணேசன் உள்ளிட்ட பள்ளிக்கல்வித்துறை அலுவலர்கள், ஆசிரியர் பெருமக்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.